ஓம் குகேசாய நம:

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச் செய்த

பாமாலைத் திரட்டு



தொகுத்தவர்: திருப்புகழ் சதுரர்

சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,

வெளியிட்டோர்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு & கைத்தறி ஜவுளி வியாபாரம்

53, கிடங்குத் தெரு, சென்னை-1

1970

உ

அன்பளிப்பு

அன்பரீர் !

கலியுக வரதனை கந்தப்பரமனது மாவிரதங்களில் தலை சிறந்தது கந்த சஷ்டி. இந்நாட்களில் இவ்விரதத்தை அனுஷ்டிப்போர் செவ்வேளின் துதிப்பாடல்களைப் பாராயணஞ்செய்ய வேண்டுவது அவசியமாகும். இதனால் அவர்கட்கு இம்மை மறுமை நலமெல்லாம் எய்தும் என்பது உறுதி.

அதற்கென்றே ஆண்டுதோறும் ஒரு தோத்திர நூல் வெளியிட்டு அன்பளிப்பாக அளித்து வருகின்றோம். அதேபோல் இவ் வாண்டிலும் **பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகள் அருளிய பாமாலைத் திரட்டு** வெளி வருகின்றது. கந்தக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து அவனிடம் நம் வேண்டுகோளை விடுப்பதுபோல இப்பாடல்கள் அமைந்துள்ளன. இதனைத் திரட்டி உதவிய **திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை,** B.A,. B T,. அவர்களுக்கு எமது நன்றியுரித்து.

இந்நூலைப் பாராயணஞ் செய்து அன்பர்கள் கந்தபிரான் திருவருள் பெற்றுய்வார்களாக.

தங்களன்புள்ள

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள்

அருவமொரு நான்காகி உருவமொரு
நான்காகி அறை யிரண்டும்
மருவியுள வருவருவ மொன்ருகி
முத்திறமும் வழுத்த வொண்ணுப்
பெரு வெளிக்கும் அப்பாலாயுள்ள
பொருளீதெனவே பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்த அருள் அருணகிரிச்
சேவடிப் போதுளத்துள் வைப்போம்!

卐

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்

பாம்பனெனும் பதிமுளைத்த பவளக்குன்றே
பழம்பாண்டித் தமிழ்ப் பொழிலே பண்பா
[ரில்லத்
தீம்பயிரே அன்புகொழி திரையே தெய்வத்
திறங்கண்ட அறநிலையே செகத்திலுற்ற
கூம்பலற எழுகதிரே குழந்தை வேலன்
குகநெறியே நெறியென்ற குருவே நீதி
ஓம்புக என்றுரைத் தொழுகி உலகில் வாழ்ந்த
உயர் குமரகுருதாச ஒளியே போற்றி!

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளருளிய

குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோநம:
,, ஷண்மத பதயே நமோநம:
,, ஷட்க்ரீவ பதயே நமோநம:
,, ஷட்க்ரீட பதயே நமோநம:
,, ஷட்கோண பதயே நமோநம:
,, ஷட்கோச பதயே நமோநம:
,, நவநிதி பதயே நமோநம:
,, சுபநிதி பதயே நமோநம:
,, நரபதி பதயே நமோநம:
,, ஸுரபதி பதயே நமோநம:
,, நடச்சிவ பதயே நமோநம;
,, ஷடக்ஷர பதயே நமோநம:
,, கவிராஜ பதயே நமோநம:
,, தபராஜ பதயே நமோநம:
,, இஹபர பதயே நமோநம:
,, புகழ்முநி பதயே நமோநம:
,, ஜயஜய பதயே நமோநம:
,, நயநய பதயே நமோநம:
,, மஞ்சுள பதயே நமோநம:
,, குஞ்சரீ பதயே நமோநம:
,, வல்லீ பதயே நமோநம:
,, மல்ல பதயே நமோநம:

ஓம் அஸ்த்ர பதயே நமோநம:
,, சஸ்த்ர பதயே நமோநம:
,, ஷஷ்டி பதயே நமோநம:
,, இஷ்டி பதயே நமோநம:
,, அபேத பதயே நமோநம:
,, ஸுபோத பதயே நமோநம:
,, வ்யூஹ பதயே நமோநம:
,, மயூர பதயே நமோநம:
,, பூத பதயே நமோநம:
,, வேத பதயே நமோநம:
,, புராண பதயே நமோநம:
,, பிராண பதயே நமோநம:
,, பக்த பதயே நமோநம:
,, முக்த பதயே நமோநம:
,, அகார பதயே நமோநம:
,, உகார பதயே நமோநம:
,, மகார பதயே நமோநம:
,, விகாச பதயே நமோநம:
,, ஆதி பதயே நமோநம:
,, பூதி பதயே நமோநம:
,, அமார பதயே நமோநம:
,, குமார பதயே நமோநம:

வேலுமயிலுந் துணை

வேற்குழவி வேட்கை

பதினே ழொன்றும்விழை செய்யபாத மோலிடநன்
மதிபோன் மாமைமுக மண்ட லம்ப குக்கநகுங்
கதியே வேற்குழவீ நின்னைக் காத லாற்றமுவ
நிதியே வாராயோ கைகணீளு கின்றனவே. 1

சீவிமுடித்தசிகை செம்பொற் சுட்டி நன்குழைகள்
மேவு முறுப்புநிழல் செய்ய வாடும் வேற்குழவீ
ஏவல் கொடுத்தருள வெண்ணி யென்முன் வாராயோ
கூவை வெறுத்தகண்க ளிச்சை கொள்ளு கின்றனவே. 2

பாவே றுஞ்சவையர் மெச்சிப் பாடும் வேற்குழவீ
சேவே றுன்பவளத் தெய்வ வாயை யேதிறந்து
தூவே றின்கரைக ளிங்குச் சொல்ல வாராயோ
கோவே யென்செவிக ளிச்சை கொள்ளு கின்றனவே. 3

பொன்னார் கண்டரச நன்கு பூண்ட தங்கவொளிக்
கொன்னார் வேற்குழவீ நல்ல கொவ்வை நின்னிதழை
என்னார் வந்தீர விங்கு நல்க வாராயோ
உன்னா ருண்ணிலையும் வாயு மூறுகின்றனவே. 4

எண்ணே றும்பலயி லென்ற வேல்பி டித்தசையுங்
கண்ணே செங்குழவீ யென்றன் கண்க ணாட ழகே
தண்ணே றுப் வதன முத்தந் தாரா யோபிறிது
நண்ணா வென்னுளந்தா னின்னை நாடுகின்றதரோ. 5

முத்தே மாமணியே முல்லை வெட்சி நன்கடம்பு
வைத்தா ரம்புனைந்தென் முன்னர் வாரா யோவுழலுஞ்
சித்தார்வேற்குழவீ யுச்சி செவ்வன் மோந்து கொள்ள
வித்தே யென்மூக்கி னிச்சை மீறுகின்றதரோ. 6

ஐயார் நல்லரையிற் பொன்வடங்க ளாடவுழல்
வையார் வேற்குழவீ யிங்கு வாராயோ கால்கள்
மையார் கண்மலர்க ளின்பு மல்க மோந்து கொள்ள
மெய்யா யென்மூக்கி னிச்சை மீறுகின்றதரோ. 7

பொன் போன் மேனியிலே நல்லபூம ணங்கமழும்
இன்பே வேற்குழவீ யிங்கு வாரா யோவிரியா
அன்பார் புன்முறுவல் செய்யு மார்விற் பல்லழகென்
துன்பீ ரம்பெனவெ னெஞ்சந் துள்ளு கின்றதரோ. 8

கள்ளார் செங்கரும்பே கண்டு தேனே யின்னமுதுண்
கிள்ளாய் வேற்குழவீ யன்பர் கேளே மாதுமையாள்
பிள்ளாய் கண்மணியொன்று நல்ல பெட்பி ஞன்றருவேன்
தள்ளா தேகொளற்கென் முன்னர் வாரா யோதகையே. 9

மாண்பார் சந்தமுனி யின்ப வாழ்வே நின்னெழிலைக்
காண்பார் வேறழகு மிங்குக் காண்பார் கொல்லோநான்
ஊண்பா டஞ்சியுனை நன்கு காண்பா னின்றுவந்தேன்
வீண்போ காதபடி யிங்ஙன் வாராய் வேற்குழவீ. 10

குறிப்பு:—இத்திருப்பத்து காலை, மாலை பூசிக்கப்பட்டுப் பத்தி பிறங்கப் பாடப்படுமாயிற் புத்திர தோடம் நிவர்த்தியாம்; சந்ததி விருத்தியாம்.

போற்றி விண்ணப்பம்

ஐயனே யரசே போற்றி யருமறைப் பொருளே போற்றி
துய்யனே துணையே போற்றி தூமணித் திரளே போற்றி
மெய்யருள் விளைவே போற்றி வெற்றிவே லேந்து பூவற்
கையனே போற்றி யெங்கள் கடவுளே போற்றி போற்றி. 1

போற்றுவிண் ணவர்கோன் போற்றி புரிதவத் தொண்டர்க்கின்
ஆற்றுநல் லழகன் போற்றி யாடுமம் பரியோன் போற்றி [பம்
நீற்றினைப் புனைந்த மேனி நிலவருட் குன்றம் போற்றி
சீற்றமெம் மேற்கொ ளாவோர் சிவசுப்பிர மணியம் போற்றி 2

மணியணி மால்வி ரிஞ்சன் மற்றுள கணங்கள் யாவும்
பணியநின் றவனே போற்றி பரமனே போற்றி யன்பர்
அணியடி யலரே போற்றி யாக்கிநன் களித்து மாய்க்குங்
குணமுடை யத்தா போற்றி குமரவேள் போற்றி போற்றி. 3

போற்றிவந் தாளு முன்றன் பொன்னடிக் கமலம் போற்றி
தேற்றுவா ருன்னை யல்லாற் றிக்குவே றில்லை போற்றி
மாற்றரும் பிறவிக் காட்டை மடிக்கமெய்ஞ் ஞானத் தீயை
ஏற்றுமெஃ குடையாய் போற்றி எங்குறை தவிர்ப்பாய்போற்றி.

பாய்நதிக் கிடையோன் வாம பாகமே கொண்டாள் தன்னைத்
தாயென வுவந்தாய் போற்றி தனிப்பரஞ் சுடரே போற்றி
வீயிலாப் புத்தேண் மாதை வேட்டுமற் றொருத்திக் கன்று
நாயக னானாய் போற்றி நான்மறை முதல்வா போற்றி. 5

முதலுமாய் நாப்ப ணாகி முடிவுமாய் நின்றாய் போற்றி
சததள பாதா போற்றி சகச்சிர நாமா போற்றி
மதிபுனை பரம னார்க்கு மதலையாய்க் குருவாய்த் தேவர்
பதியென வுளவேள் போற்றி பரஞ்சுடர்க் கண்ணா போற்றி. 6

கண்ணுமாய்க் கருத்து மாகிக் காணெழி லெந்தை போற்றி
விண்ணுமாய் மண்ணுமாகி விளங்கருள் தேவே போற்றி

பண்ணவர்க் கருளத் தண்ட பாணியா நின்ருய் போற்றி
தண்ணருட் கடலே போற்றி சதுர்முகற் கிறைவா போற்றி. 7

இறைவனே போற்றி யாதி யெந்தையே போற்றி வேலுக்
கிறைவனே போற்றி நீப விணரணி சிவனே போற்றி
மறைபுக லரிய வெங்கண் மாதவ மணியே போற்றி
துறைவறு நிறைவே போற்றி குளிர்சிவக் கொழுந்தே போற்றி.

கொழுமையிற் குளிர்மை போற்றி குக்குடக் கொடியாய் போற்றி
குழுமிய சிவ கணங்கள் கும்பிடுங் கழலாய் போற்றி
தொழுபவர்க் கருள்வோய் போற்றி சுந்தரா போற்றி யென்னை
முழுதுமாள் பவனே போற்றி மோனநா யகனே போற்றி. 9

நாயக மானுர்க் கெல்லாம் நாயக மானுய் போற்றி
தாயென வருவாய் போற்றி சண்முகத் தரசே போற்றி
தீயரிப் பெயரோாற் கன் று தெய்வமுங் குருவு மான
நீயெனைக் கலந்தாள் போற்றி நித்தனே போற்றி போற்றி. 10

பெருவேண்டுகோள்

கண்ணுயிர முடையான்முளை கனவிற்சர ணுர்கண்
எண்ணுயிர முடையூர்தியி ருந்தேசிறை மீடபேன்
உண்ணுய்துய ரென்ஞுதிய வுடையாயொளிர் பூவல்
வண்ணுவயின் மன்ஞுவென மறவேலெனை மறவேல். 1

அறிவேறுசை கீசவ்விய ஞர்சீடன டங்கா
நெறியாலணை யைம்பாதக நெடிலைக்களை யிறைவா
பொறியாயரு ணிலையாயதி புனிதாவயின் முதல்வா
வறிந்ததுமில் குமராவெனை மறவேலெனை மறவேல். 2

முருகாவயின் முருகாவென மொழியும் மொரு மாதின்
ஒருகாதல னவள்கையினை யுதிரம் பெருகிகால்
அருளால்து வளரும்படி அயர் தண்ணளி யாளா
மருமாலை கொண் மார்பாவெனை மறவேலெனை மறவேல். 3

வெறிவண்டிசை பாடும்பொழில் வேலூரினை யாளும்
பொறிதங்கிய புகழானலி யக்கோடனு றங்கும்
நெறிவந்தலர் வேலேவுதி நெரியும்பகை யென்ற
மறியின் சுதை தலைவாவெனை மறவேலெனை மறவேல். 4

திங்கட்சடை யவன் மங்கனை திகழுஞ்சிவ கோச
மங்கைக்குமு ரேசற்றெழு தான்வைகிட னெய்தி
அங்கைக்கிடு வால்வல்சிய யின்றேதிம றைந்த
மங்குற்பகை மணியேயெனை மறவேலெனை மறவேல். 5

எளியேனவி றமிழ்மாலையி யம்போர்பொழு தென்முன்
அளியாலது வென்ஞுன்முடி யாதோவென வினவிக்
களியோடுக ரந்தாயிது காறுங்கொள லறியேன்
வளியூரொரு தேராவெனை மறவேலெனை மறவேல். 6

மாடாடுகள் பல்குந்திரு வளமேவுபி ரப்பைக்
காடாரிட மதினுனடி கருதும்பொழு தெதுவும்

ஊடாடலி லாமே யொரு மொழியோதிம றைந்த
வாடாமுக முனியேயெனெ மறவேலெனெ மறவேல். 7

உரனந்திய பலவைணவ ருரனுர்சிவ நெறியை
நிரல் விஞ்சிய பலநிந்தை செய் தெற்குந்துயர் தரலைத்
திரன்விஞ்ய வதிகாரிமு னுழியும்படி செய்தாய்
வரமஞ்சிகை முருகாவெனெ மறவேலெனெ மறவேல். 8

பரிவாளர்க ளங்கோ தொரு பஞ்சாமிர்த வண்ணம்
இரியாவென துளநச்சினி தாமென் றொரு கிழமைப்
பெரியாண்முனம் வந்தோதிய செந்திற்பெரு மானே
வரிமாமறை யிறைவாவெனெ மறவேலெனெ மறவேல். 9

முழுநாரொடு புகழ்பாடிய முனிவற்களு ரேசெய்
தொழு நோயறவே செய்தொரு சுகநல்கிய துரையே
கழுகோதியி லமர்வேலவ கருணாகர முருகா
வழுவாவழி முதல்வாவெனெ மறவே லெனெ மறவேல். 10

திருப்பல்லாண்டு

பொன்னுயர் நாட்டிறை புத்திரி தனைமன்றல்
புரிந்துசெந் தினைகாத்த
மின்னினை மாமணஞ் செய்தருள் நாடிய
வித்தகர் தமையாண்டு
நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு
நான் மறை களும்விரித்துப்
பன்னரும் பரமென விருக்குநந் தேவுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

மூப்பறு கட்டிள மைத்திரு மேனியு
மூப்புடை யார்க்கெல்லாம்
மூப்புடை மேன்மையு மூப்புடை யாவிகண்
முழுவது மூப்பிளமை
யாப்பறு மாறெமை யாள்குமராவென
நாடிறை மையுநல்கு
பாட்பணை யான்மரு மானெனும் வேலற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 2

நீர்வள மார்பரங் குன்றிலு நீடெழி
னிமிர்திருச் செந்திலிலும்
சீர்வள மார்திரு வேரகந் தன்னிலுந்
தீதறு பழநியிலும்

ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு
மிருந் தடி நினைவார்க்குப்
பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 3

என்னுந ரெண்ணம தேர்ந்தரு ளேந்தலு
மிரவொடு பகலிறந்த
கண்ணர்கள் பின்றொடர் காதலுள் ளானுமோர்
காலமு மிடர்நாசம்
நண்ணுத லில்லுயர் பெருந்திற லோனுமெஞ்
ஞாலமு நினைவொன்றல்
பண்ணிடு மீசனு மாயுள்ள குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 4

அன்னையின் மேம்படு கருணையி னுற்குக
னடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னுக்கவென் றகம்புறஞ்
சார்ந்துவந் தேற்றமதி
சொன்னவ னுயனு பூதிசொன் னவற்குறு
சூரறுத் தேவராலும்
பன்னவொ ணுமல நல்கிய குகனுக்குப்
பல்லாண்டு கூறுதுமே. 5

வாழ்க நின்பேரருள் வெல்க நின்பேரருள்

போற்றிநின் பேரருள்.

வாழ்த்து

பன்னிரு தடந்தோ ளண்ணல்
பாதமென் கமலம் வாழ்க
தென்னவிர் திருவதேவ
சேனையங் குறமின் வாழ்க
மின்னயில் நவிரம் வாழ்க
வியன் அருணகிரி வாழ்க
பன்னருங் குரவன் வாழ்க
பரிவுடைச் சீடர் வாழ்க.

வேலு மயிலுந் துணை.

Jyothi Printers, Madras-1